ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

“அவஸரப்பட்டு ஒரு காரியத்தையும் செய்துவிடக்கூடாது. அவிவேகம் பரமாபத்துக்கெல்லாம் இடம்” என்று நமது நீதிநூல் உபதேசிக்கின்றது. அதனால் நம் முன்னோர்கள் ஒரு காரியத்தை அவஸரப்பட்டு தடபுடலாய்ச் செய்துவிடமாட்டார்கள். அதற்குக் காரணம் அவர்களது புத்திவலிமையே. தற்காலத்திலோவெனில் சில மேதாவிகள் பெரியோர்களுக்குப் புத்திவலிமையில்லையென்றும், அதனால் அவர்கள் ஸந்தேஹப்பட்டுக்கொண்டு பழைய வழக்கத்தை மாற்றத்துணிந்துவிடமாட்டார்கள் என்றும், தாங்கள் அப்படிக்கிருக்கவில்லையென்றும், தானாகத் தன்னையே புகழ்ந்துகொள்ளுகிறார்கள். ஆராய்ந்துபார்த்துச் செய்வது நலமா? அவஸரப்பட்டுச் செய்வது நலமா? என்ற விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்தால் நலமின்னதென்று புலப்படும். நவீனாகரீகப் பிரமுகர்கள் தங்கள் புத்தியில் அவ்வப்பொழுது தோன்றுவதெல்லாம் வாஸ்தவமென்றே நம்பியிருக்கிறார்கள். அதனால் சில ஸமயத்தில் நாஸ்திகமதமே தேவலை என்று தோன்றிவிட்டால் அதுதான் ஸரி, மற்றவை தப்பு என்று கூறுவார்கள். ஒரு சமயம் ராஜீயகக்ஷியில் சேருவார்கள். மற்றொரு ஸமயம் தேசீயத்தில் சேருவார்கள். இவ்வாறு அவ்வப்பொழுது தோன்றுவதையெல்லாம் சரியானதென்றே நினைத்துக்கொண்டு அதனை ஸ்தாபிக்க ஆள் சேர்ப்பார்கள். சேராதவர்களை வாய்கூசாமல் வைய்யத்துணிவார்கள். அப்படியெல்லாம் பிரவிருத்திப்பதற்கு பிரமாணமென்னவென்றால் தனக்குத் தோன்றியதே பிரமாணமென்பர். நெடுநாளாக வேறொன்றைப் பிரமாணமாக வைத்துக்கொண்டவர்கள் உடனே இதை நம்பிவிடாமல் ஆலோசனை செய்வார்களானால் அவர்கள் நம்பியிருந்தப் பிரமாணத்தில் இவர்களுக்குத் தோன்றியதுதான் கூறப்பட்டிருக்கின்றதென்று பூர்வீக பிரமாணங்களுக்கு தப்பு அர்த்தம் செய்து இதுதான் சரியான அர்த்தம் என்பார்கள். இவ்வாறு அர்த்தம் செய்தால் முன்னுக்குப் பின் விரோதிக்கிறதே என்று கேட்டால் விரோதிக்கிற வாக்கியம் தப்பு என்று சொல்லிவிடுவார்கள். பிரத்தியக்ஷாதிகளுக்கு எட்டாத விஷயங்களை இவர்கள் சொற்படித்தான் அங்கீகரிக்க வேண்டுமாம். முன்னோர் சொற்படி நடப்பது மூடபக்தி என்று பரிஹஸித்து விடுவார்கள். முன்னோர்கள் சொன்னது பிரமாணமாகாமற் போனதற்கும் இவர்கள் சொல்வது பிரமாணமாய் விட்டதற்கும் என்னகாரணமோதெரியவில்லை. சரித்திர ஆராய்ச்சிக்காரர் சிலர் நமது சரித்திர ஆராய்ச்சிக்கு முன் எதுவும் நிற்காது என்றும், அதிலிருந்து தோன்றுவதே சரி, மற்றவை தப்பு என்றும் தமது கோஷ்டியில் கோஷிக்கின்றனர். இதன் நடுவே வர்ணாசிரம தர்மமும் உலாவிக்கொண்டிருக்கிறது. அதனை ஆஸ்திகரனைவரும் ஆதரித்து ஆனந்திப்பாராக

பத்திராதிபர்,

## ஆர்ய தர்மம்.

சுக்ல-வருஷ கார்த்திகை-மீ ௨௭௨

### ஸநாதன தர்மமும் ஸந்தேஹத்திற்கிடமாயிற்று.

இதுவரை பிரஸங்கிப்பவர்களும், பத்திரிகைகளில் வியாஸம் எழுதிப் பிரசுரிப்பவர்களும், சாரதாசட்டத்தைத் ஆதரிப்பவர்களை ஸநாதனதர்மிகளல்லவென்றும், அச்சட்டத்தைக் கண்டிப்பவர்களை ஸனாதன தர்மிகளென்றும் வழங்கிவந்திருக்கிறார்கள். இப்பொழுது சாரதாசட்டத்தை அனுஸரிப்பவர் பேசுவது ஸனாதன தர்மமா? அச்சட்டத்தை எதிர்ப்பவர் பேசுவது ஸனாதன தர்மமா? ஸனாதனதர்மம் யாது? என்று சிலர் பேச்சிலிருந்து ஸந்தேஹிப்பதற்கு இடமாய்விட்டது. ஜானகிபரிணயமென்று ஸ்ரீமான் ஸ்ரீ ராமபத்திரதீக்ஷிதர் அவர்கள் இயற்றிய நாடகத்தில் "ஸித்தாச்ரமத்தில் தாடகை, சுபாஹு முதலியவர்களை ஸம்ஹரித்துத் தன்னையும் நடு சமுத்திரத்தில் அஸ்திரவேகத்தால் முழுக் காட்டின ஸ்ரீ ராமசந்திரனோடு எதிர்த்து நின்று யுத்தம் செய்யசக்தியற்ற மாரீசன், காளனென்ற மற்றொரு ராக்ஷசனைச் சேர்த்துகொண்டு மாயையால் ஸ்ரீ ராமனைக்கொல்ல எண்ணி, ஸித்தாச்ரமத்திற்கு ஸமீபித்தவனத்தில் கற்பிக்கப்பட்ட ஓர் உத்தியானவனதில் மாயையினால் ஸகிகளோடு ஸீதாதேவி விரஹவேதனையையனுபவித்துக்கொண்டு இருப்பதாகவும், நெருக்கடியான கொடிய ஓர் ஸம்பவத்தால் வாஸ்தவாக்கினியில் அந்த மாயாஸீதை பிரவேசிப்பதாகவும், காட்டி ஸ்ரீ ராமனையும் அதே வாஸ்தவ நெருப்பில் விழுந்து உயிரிழக்கும்படி செய்து பழிக்குப்பழிவாங்கிவிடுவதாக மனதில் நிச்சயித்துக்கொண்டு, ஸ்ரீ ராமச்சந்திரன் இனத்தாரைவிட்டு பிரிந்துவரும் சமயத்தை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தானும். அத்தருணத்தில் மார்க்க சிரமத்தால் மயங்கித் தூங்கும் இனத்தாரைவிட்டு காலில் பூட்ஸ்போட்டுக்கொண்டு அம்பையும், வில்லையும், கையிலேந்திக் கானகத்தைப்பார்க்க ஆசைகொண்டு ஏகாகியாக ஸ்ரீ ராமச்சந்திரன் கூடாரத்தைவிட்டு வெளியேறினார். அச்சம

யம் பார்த்து மாரீசனும், காளனனும் கலந்து பேசிக்கொண்டு விசுவாமித்ர மஹரிஷியின் சிஷ்யரான காசியபருடைய வேஷத்தை மாரீசனும், ஸ்ரீராமசந்திரனுடைய ஸ்னேஹிதரான பிங்களனுடைய வேஷத்தைக் காளனனுமாகப் போட்டுக்கொண்டு ஸ்ரீராமனை கபடமாக வெகுதூரம் அழைத்துப்போய் தோழிகளோடு மாயா ஸீதையைக் காண்பித்து அந்த நடவடிக்கை முழுவதும் மெய் என்றே ஸ்ரீராமனும் மயங்கும்படி செய்துவிட்டான். கூடாரத்தை விட்டு விலகி கொஞ்சதூரம் ஸ்ரீ ராமன் வந்ததும் விழித்துக்கொண்ட பிங்கள காசியபர்கள் ஸ்ரீ ராமனைக்காணமல் தேடப்புறப்பட்டு மாரீசமாயையில் மயங்கி மாயாஸீதையை வாஸ்தவ ஸீதையென்றும், காள மாரீசர்களை நிஜம் பிங்கள காசியபர்களென்றும், அந்த மாயா நடவடிக்கைகளெல்லாம் வாஸ்தவமென்றும் பிரமித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீராமசந்திரனைப் பார்த்து பிங்கள காசியபர்கள் அழைக்கவே, காள மாரீசர்கள் பிங்கள காசியபர்களை ராக்ஷஸர்களென்றும், உடனே கொல்ல வேண்டுமென்றும் கூறும்பொழுது ஸ்ரீ ராமனும் பாணப்பிரயோகம் செய்ய எத்தனித்து விடவே, பிங்கள காசியபர்கள் ஹே மித்ர ! இவையெல்லாம் மாரீசமாயை. அவசரப்பட்டு ஒன்றையும் செய்துவிடாதே. செய்வதை ஆலோசித்துச் செய்யென்று மாரீசனது ஒவ்வொரு மாயாப்பிரவர்த்திதோறும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக ஸீதையைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்க, அதை சம்மதிக்காத ஜனகமஹாராஜனைக் கொன்றுவிட்டு ராவணன் ஸீதையை அபஹரிக்க இதோ ஓடிவருகிறானென்று ஒரு தோழிவந்து சொல்லும்படி மாயைசெய்து அதைக் கேட்டவுடன் மாயாஸீதை வாஸ்தவ நெருப்பில் ஓடி விழுந்துவிட்டாள். அதைப்பார்த்த ஸ்ரீ ராமனும் எனக்காக உயிரிழந்த என் காதலியைப் பின்பற்றி நானும் நெருப்பில் விழுந்துவிடுகிறேனென்று ஓர் கல்லின்மீதேறி விடவே, அதைக் காள மாரீசர்கள் ஆமோதிக்கவே, பிங்கள காசியபர்கள் ஐயோ ! இதென்ன பரிதாபம் ! இதென்ன விபரீதம் ! நாமும் ராக்ஷஸர்களாக பாவிக்கப்பட்டு விட்டோமே. யார் உண்மையைச் சொல்வார்கள். நமது குலகுருவான விசுவாமித்திரரிடம் போய் யாரிதைச் சொல்வார்கள் என்று பரிதபிக்கும்போது, ஸ்ரீ ராமமூர்த்தியின் பாதஸ்பரிசம் பட்ட சிலை கௌதமர் பத்னியாகிய அகல்யா ஸ்வரூபமாகப் பரிணமித்து ஸ்ரீ ராமனை ஆசீர்வ

தித்து, உண்மையையுரைத்து, பிங்கள காசிபபர்களைப் பக்கத்தில் அழைத்து இவர்களுடைய வேஷந்தரித்தவர்களுள் காராளனைக் கொன்றுவிடச்செய்து, மாரீசனை விரட்டி, நேர்ந்த ஆபத்திலிருந்து ஸ்ரீ ராமாதிகளை விலக்கிவிட்டது" என்று ஒரு கல்பனை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கல்பனையில் மாரீசமாயை, ராம மித்திரர்களை ராக்ஷஸர்களாகவும், ராக்ஷஸர்களை மித்திரர்களாகவும். மயக்கிவிட்டதுபோல் சிலரது பிரௌடா விவாஹமாயை வாஸ்தவ ஸனாதன தர்மத்தை ஸனாதனதர்மம் இல்லாததுபோலவும், விபரீத அனார்யதர்மத்தை ஸனாதனதர்மம் போலவும், மயக்கிவருகிறது. அதன் விரிவு அடுத்தபடி காண்க. அந்த மாயையிலகப்பட்டு ஆர்யச்சிறுவர்கள் நரகாக்கினியில் விழத்துணிந்து விட்டார்கள். அஹல்யாதேவிபோல இவர்களுக்கு யார் உண்மை உரைக்கப் போகிறார்களோ தெரியவில்லை. கீதாவாக்கியப்படி பரமேசுவர சக்தியொன்று இப்பொழுது வெளிப்படுமென்பதில் சந்தேகம் இல்லை. ஆகையால் விவேகிகள் அவசரப்பட்டு ஒரு கார்யத்தை நடத்தத் துணிந்துவிடாமல் தீர்க்காலோசனை செய்து செய்ய வேண்டியதைச் செய்து க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

## மாலதீமாதவம் மஹாப்ரமாணமாம்.

விவாஹவயதைப்பற்றிப் புதிதாகச் சட்டமாய்விட்டதை யொட்டி, வர்ணாசிரமிகளை வேறுபடுத்திப்பேசும் சிலர் ஸந்தோஷ ஆரவாரக்கூச்சல் போடுவதுடன் அச்சட்டத்தை மறுப்பவர்களைப் பற்றி நிந்தித்துப் பெருங்கூக்குரல் போடுகிறார்கள். உலகஸ்திதிக்குக் காரணமாகிய தர்மாதர்மவியவஸ்தைகள் ஒரேமாதிரியாக இல்லாமல் புதிபுதிதாக இருக்கவேணுமென்று அவர்கள் எண்ணம். இப்பொழுது வர்ணாசிரமவியவஸ்தைகள் தட்டுக்கெட்டு நிற்பதுபோலவே முன் யுகங்களிலும் இருந்திருக்கவேணுமென்றுமவர்கள் ஊஹம். இப்படி ஊஹிப்பது தப்பென்று பாஷ்யகாராள் வேதாதிகரணத்தில்,

इदानीमिव च कालान्तरेपि अव्यवस्थितप्रायान् वर्णाश्रमधर्मान् प्रतिजानीयात् ।

"அந்த புத்திமான் இப்பொழுதுபோலவே காலாந்தரத்திலும் வர்ணாசிரமதர்மங்கள் வியவஸ்தையில்லாமலிருப்பதாக பிரதிக்ஞை செய்வான்."

என்று கூறியுள்ளார். இதனால் காலாந்தரத்தில் வர்ணாசிரமதர்மங்கள் வியவஸ்தையோடு இருந்ததாகத் தெரிகிறது. காலதோஷத்தால் மதாந்தரஸ்தர்கள் ராஜ்யபாரம் வஹிக்கத் தலைப்பட்டதிலிருந்து அவை மாறிக்கிடக்கின்றன. அதனால் அதிவிருஷ்டியாலும், அனாவிருஷ்டியாலும், துர்பிக்ஷத்தாலும், கொடிய நோய்களாலும் பிராணிகள் பீடிக்கப்படுகிறார்களென்பது வட தேசத்தில் அதிக மழையால் நேர்ந்த ஆபத்தைப் பத்திரிகைகளில் பார்த்துப் படித்தவர்களுக்கு மறந்துபோயிருக்காது, ஞாபகத்தில் இருக்கும். புதுப்படிப்பினாலேறிய புதிய வாஸனையால் சிலர் ஒரு சில நூற்றாண்டுகளாக நடக்கும் சில நாவல்சரித்திரங்களின் ஆராய்ச்சியால் அச்சரித்திர நடப்புப்போலவே உலகஸிருஷ்டி முதல் பிராணிகளின் நடப்பு இருக்குமென்று குருட்டுநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சுருதிஸ்மிருதிகளின்முகமாகத் திரும்பிப்பார்த்தால் இந்தக் குருட்டுநம்பிக்கை நசித்துவிடுமென்று பயந்து அந்த முகமாக அவர்கள் திரும்புவதேயில்லை. சிலர் சுருதிஸ்மிருதிகளை நம்புவதுபோல் அபினயித்தும் குருடர்கள் யானை கண்ட காக்ஷியாக முழுப்பார்வையில்லாமல் சிற்சில பாகத்தைப் பார்த்தவுடனேயே தோன்றியதைப் புலம்பிவிடுவதிலேயே துணிந்துவிட்டார்களேயன்றி முழுமையுங்கண்டவன் சொல்லுவதைக் கேட்போமென்று அமைதியடைவதில்லை. இக் கலவரத்தில் முக்கியமாயிருப்பவர்கள் யாரென்றால் இவ்வுலகில் கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம் என்று எத்தொழிலைச் செய்தேனும் வயிர்வளர்த்துவிடவேண்டியதையே பெரிய புருஷார்த்தமாகக் கொண்டவரும் புதிதுபுதிதான நாவல்களையே பெரியப்பிரமாணங்களாக நம்பிய புதுப்படிப்பாளிகளுமாகத்தான் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். இவர்களையும் பின்பற்றுபவராகச் சிலரிருக்கிறார்கள். இவர்களை ஒருபொருட்டாக மதிக்கவேண்டாம். கிளிப்பிள்ளைபோல் சொன்னத்தைச் சொல்லத்தான் இவர்களுக்கு

யோக்யதை. புதிய படிப்பாளிகளின் நாவல்சரித்திரஆராய்ச்சியெல்லாம் சுருதிஸ்மிருதிக்காற்று வீசுமிடத்தில் வந்தால் பஞ்சாக பறக்கும். சுக்கில-௵ கார்த்திகை-௴ 14உ வெளிவந்த ஜனமித்திரன்பத்திரிகையில் "ஸநாதனதர்மம் யாது?" என்று தலைபங்கமிட்டு ஸ்ரீமான் கி. லக்ஷ்மணசர்மா B.A., B.L., அவர்கள் எழுதியதோர் வியாஸத்தில் ஸ்ரீமான் சர்மா அவர்கள் "இவர் படிப்பெல்லாம் சரித்திர ஆராய்ச்சியின் எதிர் நிற்காத படிப்பு" என்று சரித்திர ஆராய்ச்சியென்ற பிரம்மாஸ்திரத்தாலேயே வர்ணாசிரமிகளின் படிப்பைப் பாக்கடிப்பதாக பிரதிக்ஞைசெய்து பிரதானமாக அதையே விரிவாகச் சொல்லவேண்டியிருக்க, அதை முதலில் எடுக்காமல் "விவாஹ ஒழுங்கானது வேதங்கள், ஸூத்திரங்கள், ஸ்மிருதிகள் என்ற மூன்றுவகை நூல்களாலேயே அறியவேண்டியதாகும்" என்று சுருதிஸ்மிருதிஸூத்ரங்களை முதலில் விசாரிக்கத்தொடங்கினார். அப்படி அந்த விசாரணையாவது ஒழுங்காக நடத்தினாரா என்று பார்த்தால் பூராவும் விசாரித்ததாகத் தெரியவில்லை. ப்ரௌடாவிவாஹத்திற்கு பிரமாணமாக வரன் பெண்ணைப் பார்த்துச்சொல்லும் ஓர் மந்திரத்தை எடுத்துக்காட்டின ஸ்ரீமான் சர்மா அவர்கள் அதற்கடுத்த மந்திரமாகிய "ஸோமன் கந்தர்வனுக்குக் கொடுத்தார். அந்த கந்தர்வன் அக்னிக்குக் கொடுத்தார். அந்த அக்னி ஐசுவரியத்தையும், புத்திரர்களையும் கொடுத்தார். பிறகு இந்தப்பெண்ணை எனக்குக்கொடுத்தார்" என்ற மந்திரத்தை பிரமாணமாகக்கொண்டு நமது விவாஹமந்திரங்கள் ப்ரௌடாவிவாஹத்தோடு நிற்காமல் புத்திரவதிவிவாஹத்தையும், அதிலும் "புத்திரர்கள்" என்று புத்திரசப்தத்தின்மேல் பன்மையிருப்பதால் அனேகம் புத்திரர்களைப் பெற்றவன் விவாஹத்தையும் கூறுவதாக எக்காரணத்தால் சொல்லவில்லையோ தெரியவில்லை. ஆனால் கடைசிமுடிவில் ஏதோ ஒரு வசனத்தை "இவ்வசனம் இப்படி என்று அறிந்தால் இது வேண்டவே வேண்டாமென்று வெறுக்காதவர் இரார்" என்று கூறிவிட்டதுபோல் இதையும் அப்படி விகாரமாயிருப்பதாயும் அருவருக்கத்தக்கதாயும் இருப்பதாக நினைத்து விட்டுவிட்டார்போலும். மந்திரப்ரச்னத்திலுள்ள ஒரு மந்திரம் பிரமாணமாம், மற்ற மந்திரம் அப்பிரமாணமாம். இது என்ன புரளி பாருங்கள், இவைகளையெல்லாம் 'ஒள்ளாக்கட்டி' என்று நினைத்துவிட்டார்போலும். "வைதிகர் வாதிப்பது முழுப்

பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப்பார்ப்பதுபோல் ஆகும்" என்று ஸ்ரீமான் சர்மா அவர்கள் எழுதியிருக்கிறார்கள். வைதிகரை வேறுபடுத்திப் பேசும் வைதிகரல்லாதார் வாதிப்பது காட்டானையைக் குடத்தில் அடைக்கப்பார்ப்பதுபோலாகும் என்பதை கெவனிக்கவில்லைபோலும். "அறநூல்களில் விவாஹவயதைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லாவிட்டாலும்" என்று எழுதியிருக்கின்றார். எந்த அறநூல்களைப் பார்த்துவிட்டு இப்படி எழுதுகிறாரோ புரியவில்லை. அறநூல்களெனப் பிரஸித்தமான மனுஸ்மிருதி முதலிய ஸ்மிருதிக்கிரந்தங்கள் யாவும் 8-வது வயதே முக்கியகாலமென்று சொல்லுவதை ஸ்ரீமான் சர்மா அவர்கள் பார்க்காமலிருக்கக் காரணம் யாதோ தெரியவில்லை. "பெண் மாதப்பெருக்கு ஏற்பட்டு மூன்றுவருஷகாலம் தன் பிதாவின் அதிகாரத்திலிருப்பதாயும் அதற்குள் பிதா எந்த புருஷனுக்காவது அவளை தாரைவார்க்கலாமென்றும், இப்படி மூன்று வருஷம் பிதா அவ்வாறு செய்யத் தவறினால் அதன் பின் பெண் தானாகவே ஒரு நல்ல புருஷனை அடைந்து வாழவேண்டுமென்றும், பிதாவுக்கு அப்போது அதிகாரம் கிடையாதென்றும் தெள்ளியமொழிகளால் கூறப்பட்டிருக்கிறது." என்று எழுதியிருக்கிறார். இது வாத்ஸவம் இதுதான் விவாஹத்திற்கு முக்கிய காலமென்று எந்த பதத்தால் கிடைத்ததோ தெரியவில்லை.

विवाहश्चोपनयनं स्त्रीणामाह पितामहः ।
तस्माद्गर्भाष्टमः श्रेष्ठः जन्मतो वाष्टवत्सरः ॥

"ஸ்திரீகளுக்கு விவாஹத்தையே உபநயனமாகப் பிதாமஹர் கூறுகின்றார். ஆகையால் கர்ப்பத்திலிருந்தோ, ஜனனத்திலிருந்தோ எட்டாவது வயது முக்கியகாலம்" என்று கூறியதெல்லாம் இவர்கள் கண்ணில் படவில்லைபோலும்.

"மேலும் பிதாக்கள் பெண்களை வீட்டு வேலைக்கு இருக்கட்டுமென்று ஒரு புருஷனுக்குக் கொடாமல் இருப்பதுண்டு என்றும், அறநூல்கள் காட்டுகின்றன" என்கிறார். எந்த அறநூல் இப்படிக் காட்டுகின்றதோ தெரியவில்லை. விவாஹமான நாலாவது நாள் கர்ப்பாதானவிதிஇருப்பதாகவும் அதையும்மறந்து பண்டித சிகாமணிகள் பேசுகிறார்களென்றும் எழுதியிருக்கிறார். எந்த

1174
1174 1-600



இடத்தில் விவாஹமான நாலாவது நாளில் கர்ப்பாதானவிதி கூறப்படுகிறதோ தெரியவில்லை. ருது ஸமாவேசனம் என்னும் கர்ப்பாதான விதி விவாஹத்திற்குப் பிறகு மணப்பெண் எப்பொழுது ப்ரௌடையாவாளோ அதற்குப் பிறகு அந்த ருதுகாலம் நாலுநாள் தள்ளி பிறகு ருதுஸமாவேசனம் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஸூத்திரங்களையும் பிரமாணமாகக் கோரின ஸ்ரீமான் சர்மாவர்கள் ஆபஸ்தம்ப கிருஹ்யசூத்திரத்தைப் பார்க்கவில்லைப் போலிருக்கிறது. ஆபஸ்தம்பகிருஹ்யசூத்திரத்தில் விவாஹம் நாலாவது நாளில் சேஷஹோமபர்யந்தம் மந்திரப்ரயோகத்தைச் சொல்லி முடித்துவிட்டுப் பிறகு,

यदा मलवद्वासास्स्याद् अथैनां ब्राह्मण प्रतिषिद्धानि कर्माणि संशास्ति ।

"மணப்பெண் எப்பொழுது ருதுமதியாவாளோ அப்பொழுது இவளுக்கு ரஜஸ்வலைக்கு நிஷேதிக்கப்பட்ட கர்மங்களை கணவன் சொல்லவேண்டும்.

என்று விவாஹகாலத்திற்கு பிறகுதான் மணப்பெண் ருதுமதியாவதாகக் கூறப்படுகிறது. அப்புறந்தான் ருதுசமாவேசனம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் "ஒள்ளாக்கட்டி" என்று தற்காலத்தியவர் வாதிப்பது பொறுத்தமுடையதன்று. இதுவரை சுருதிஸ்மிருதி சூத்திரங்களை விசாரித்து விட்டதுபோல் முடித்துவிட்டு ஸ்ரீமான் சர்மா அவர்கள்— "சரித்திர ஆராய்ச்சியில் புகுந்தாலோ" என்று சரித்திர ஆராய்ச்சியில் புகுந்தார். வாஸ்தவமாய் நடந்த எவ்வளவோ மஹான்களது சரித்திரங்களிருக்க மாலதீமாதவமென்ற நாடகச் சரித்திரத்தை ஆராயத் தலைப்பட்டார். மாலதீமாதவமென்ற நாடகத்தில் கூறியகதை அந்தக்கவியினால் கற்பிக்கப்பட்ட கதை. இது ஒரு சுருதியிலாவது, ஸ்மிருதியிலாவது, ஸூத்திரத்திலாவது, இதிஹாஸபுராணத்திலாவது, புராணத்திலாவது கூறப்பட்டதல்ல. இதனுண்மை தசரூபகம் ப்ரதாபருத்ரீயம் முதலிய அலங்கார கிரந்தங்களில் பத்து ரூபகங்களின் லக்ஷணத்தைத் தெரிந்துகொண்ட ஆர்யச்சிறுவர்களுக்கும் தெரியும் ப்ரதாபருத்திரீயத்தில்,

उत्पाद्येनेतिवृत्तेन धीरशान्तप्रधानकम् ।
शेषं नाटकतुल्याङ्गं भवेत्प्रकरणं हि तत् ॥

"கவியினால் கற்பிக்கப்பட்ட கதையுள்ளதும், தீரசாந்தீன நாயகனுக உடையதும், நாடகம்போலுள்ள மற்ற அங்கங்களையுடையதுமான ரூபகம் பிரகாணமெனப்படும்" என்று கூறப்பட்ட பிரகரண லக்ஷணம் பொருந்திய மாலதீமாதவத்தில் கூறியகதை கட்டுக்கதை. அதைப்பெரிய பிரமாணமாகக் காட்ட முன்வந்தது ஆர்யச்சிறுவர்களுக்கு ஹாஸ்ய ஹேதுவாகிறது. பவபூதி மஹாகவியினுடைய இந்த கட்டுக்கதையைப் பிரமாணமாக நம்பியவர் ஸ்ரீ ராமபிரானது ப்ரசித்தமாய் நடந்த கதையைப்பற்றி எழுதிய உத்தரராம சரிதம் என்னும் நாடகத்தில்,

अविवाहसमयाद्गृहे वने शैशवे तदनु यौवने पुनः ।
स्वापहेतुरनुपाश्रितोऽन्यया रामबाहुरुपधानमेष ते ॥

" விவாஹம் நடந்த சமயம் முதல் பால்யத்திலோ, யௌவனத்திலோ, வீட்டிலோ, அல்லது காட்டிலோ, தூக்கத்திற்குக் காரணமாயிருந்ததும், மற்றொரு ஸ்திரீ ஆச்ரயிக்காததுமான இந்தராமன் கை ஹே ஸீதே! உனக்குத் தலையணையாக இருக்கின்றது" என்ற சுலோகத்தில் "சைசவே" என்ற பதத்தை ஆராய்ச்சிசெய்தால் ப்ரௌடாவிவாஹம் வேரோடாந்துவிடும். இன்னும் அந்த நாடகத்தில் அனேகவிடங்களை ஆராய்ச்சி செய்தால் பாலிகா விவாஹமே சிறந்ததென தெளிவாகும். மாலதீமாதவத்தையும் உள்ளபடி இவர் ஆராய்ச்சி செய்திருப்பாரானுல் ப்ரௌடா விவாஹம் இவர் மனதில் தோன்றவே தோன்றாது. மாலதீமாதவ கட்டுக்கதையை பெரிய பிராமாணமாக எடுத்த இவர் புராணங்களை விவாஹ விஷயத்தில் பிரமாணமாக எடுக்கக்கூடாதென்று எழுதியதற்குக் காரணம் யாதென்று தெரியவில்லை. வைத்திய நூல்களை ப்ரௌடா விவாஹத்திற்குப் பிரமாணமாக எடுக்கிறார். அதைப்பற்றியும் மற்றும் இவர்கூறிய யுக்திகளைப்பற்றியும் அடுத்ததோர்சமயம் கவனிப்போம்.

சுந்தரேசன்.

## ஓர் விக்ஞாபனம்.

ஜனங்கள் கீர்வாணபாஷையை ஆதரிக்க வேண்டியவிஷயத்தைப்பற்றி ஆர்யதர்மத்தில் பிரசுரம செய்ததற்கு மிகவும் சந்தோஷம். இப்பொழுது வைதிக விஷயங்களில் சிரத்தை ஜாஸ்தி எற்

பட்டு வருவதால் அவ்விஷயங்களில் இனியொரு முக்கியமான விஷயம் எனக்குத் தோன்றினமட்டும் குறிப்பிடலாமென்று துணிகிறேன்.

த்விஜர்களுக்கு முக்கியமான விஷயம் உபநயனம். அது 7-வயதிற்குள் செய்ய வேண்டுமென்று நியமம். ஆனால் அதை 15 வயது வருகிறவரையிலும் தள்ளி வைக்கிறார்கள். மேலும் உபநயனத்தில் வைதிக விஷயத்தை மிகவும் சுருக்கி விடுகிறார்கள். வீண் ஆடம்பர செலவு மிகவும் ஜாஸ்தியாகிவிட்டது. உபநயனத்திற்கு பிற்பாடு குருகுலவாஸம் முதலானது போய்விட்டது. வடதேசங்களில் ஹரித்வார் முதலானவிடங்களில் பிரம்மசாரிகளுக்கு பல குருகுலங்களிருக்கின்றன. உபநயத்திற்கு தொடர்ச்சியாக குருகுலவாசத்திற்குவேண்டியஏற்பாடுசெய்யவேண்டியது மிகவும்அவசியம். குறைந்தது 3-வருஷமாவது உபநயநத்திற்கு பிறகு வேதாத்யயனம் முதலானது ஆனபிறகு ஆங்கிலம்கற்று பிள்ளைகள்வாசித்தால் மிகவும் நலமாயிருக்கும். மேலும் உபநயன சமயத்தில் நம்முடைய சாஸ்திரங்களில் பயிற்சிபெற்றுவருந்துகிறவர்களுக்கு அவரவர்களுக்குத் தகுந்தபடி ஒரு வித்வத்சபை ஏற்படுத்தி தகுந்த வெகுமானம் செய்தால் உபநயனம் செய்கிறவர்களுக்கும் நம்முடைய சாஸ்திரப்பயிற்சிக்கும்மிகவும்நல்லஉபகாரமாகயிருக்கும்.

மேலும் நம்முடைய முக்கியமான வைதிக கர்மாவில் முக்கியமான உபநயனத்தை ஜனக்கூட்டமில்லாத கிராமாந்தரங்களில், தீர்த்தங்களில், புண்ணிய க்ஷேத்திரங்களில் செய்வது மிகவும் உத்தமம்.

## புரோகிதர்கள்.

நம்முடைய கர்மாக்களுக்கு முக்கியமாக உபாத்யாயர்கள் அவசியம். இப்பொழுது ஸ்மார்த்தர்கள் இந்த தேசத்தில் நாலா பக்கங்களிலும் இருக்கிறார்கள். அவரவர் கர்மாக்களை நடத்த வேண்டியதை யோசித்தால் இப்பொழுது மிகவும் சிரமமாயிருக்கிறது. லௌகிகர்களுக்குப் பல இடங்களில் சிரத்தை குறைந்துவிட்டது. நம்முடைய புராதனமான வேதாசாரத்தைப் பிரசாரம் செய்வதற்கு தகுந்த பிரசாரகர்கள் ஏற்படுத்தவேண்டும். ஆங்காங்கிருக்கும் புரோகிதர்களை மடத்திலிருந்து ஏற்பாடுசெய்து இவ்விஷயங்களைக் கவனிக்கும்படி செய்யலாம்.

காலதேசவர்த்தமானத்தினால் இப்பொழுது விலைவாசிகள் ஜாஸ்தியாயிருக்கிறது. ஆனால் வைதிகதொழிலில் இருக்கிறவர்களுக்கு ஏற்பட்ட தக்ஷிணை பழையபடியே இருக்கிறது. அதனால் அதை யோசித்து கர்மாக்களுக்கு தகுந்தபடி மாற்றுவது, சிரமப்பட்டு ஜீவனம் செய்யும் வைதிகர்களுக்கு கொஞ்சம் அனுகூலமாயிருக்கும். அத்யயனம் செய்தவர்கள் செய்யாதவர்கள் எல்லாரும் இந்த பிரவர்த்தி செய்கிறார்கள். மடத்திலிருந்து வித்வத் ஸபையில் ஸ்ரீமுகம் பெற்றவர்கள் மாத்திரம் வைதிககர்மாக்களை நடத்தவேண்டுமென்று ஒரு ஸ்ரீமுகம் ஏற்பட்டால் மிகவும் நல்லது. இதை உத்தேசித்து பரோடா சமஸ்தானத்தில் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதேமாதிரி மற்ற இதர மதஸ்தர்கள், கிருஸ்துவர், மகம்மதியர்கள் ஆங்காங்கு சட்டநிர்மாணப்படி படித்தவர்களுக்கே பட்டங்கள் முதலானது கொடுத்து ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.

## பழைய கிரந்தங்கள்.

பலகாரணங்களினால் நம்முடைய புராதனமான விலையற்ற அனேககிரந்தங்கள் அழிந்துபோகின்றன. பல வெளி நாட்டிற்கு போய்விடுகிறது. மைசூர், பரோடா, திருவாங்கூர் முதலான இடங்களில் பழையகிரந்தங்களை சேகரித்து அவைகளைகாப்பாற்ற முயற்சிகள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் இதை கவனிப்பார் வெகுசிலர். ஆங்காங்கு வைதீக சிரத்தையுள்ள ஆஸ்திகர்கள் மூலம் இந்த விஷயத்தை கவனிக்கும்படி செய்யவேண்டும். சனாதன தர்மசபைகள் இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டும். பழயகிரந்தங்கள் போனால் அதுபோல நஷ்டம் வேறொன்றுமில்லை. பழயகிரந்தங்களை சேகரித்து ஒரு சௌகரியமான இடத்தில் பாதுகாத்து அவைகளை பிரசுரம் செய்வது மிகவும் முக்கியமான காரியம்.

இப்பொழுது கீர்வாணபாஷையில் பயிற்சிபெற்று சிரோமணி முதலான பட்டங்கள் பெற்று 25, 30- அவர்களுக்கு மாதவாரி கிடைக்கிறது. மற்ற இதர பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு எவ்வளவு சம்பளமோ அதற்குக் குறையாமல் இவர்களுக்கும் கொடுக்கும்படி சட்டசபைமூலம் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். இப்பொழுது தமிழ்வாத்தியார், ஸம்ஸ்கிருதபண்டிதர் என்றால் எல்லாருக்கும் ஹேளனமானதாக இருக்கின்றது.

நம்முடைய தெய்வத்தன்மையான தீர்த்தஸ்தலங்கள், ஆலயங்கள் இவைகள் மிகவும் பரிதாபமான ஸ்திதியில் இருக்கின்றன: சோழநாட்டில் தொண்டுதொட்டு சிவபக்திவாய்ந்த சோழமன்னர்கள் ஏற்படுத்தின ஆலயங்களிருக்கிற ஸ்திதி மிகவும் கிலேசத்தை உண்டுபண்ணுகிறது. இந்தப் பழைய ஆலயங்களை கவனித்து அவைகளில் பூஜை நைவேத்தியம் முதலானதுகளை நடத்த ஆஸ்திகர்கள் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

மேற்சொல்லிய விஷயங்களை மிகச்சுருக்கமாக நாலைந்து விஷயங்களை எழுதியிருக்கிறேன்.

தங்களுக்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அவைகளை கவனித்து பிரசுரம் செய்யவோ, அல்லது வேறு பெரிய ஆஸ்திக சிரத்தையுடைய கனவான்களிடம் சொல்லவோ செய்யவும்.

இந்த தேசம் (நிஜாம் ராஜ்யம்) தெலுங்கு, உருதுபாஷை பேசக்கூடிய ஜனங்களிருக்கிறதேசம். தமிழ் தேசத்திலிருந்தும் உத்தியோகத்திற்கும் மற்றப் பிரவர்த்தியிலும் பலபேர் இருக்கிறார்கள். இவ்விடம் சௌகர்யப்பட்டால் ஒரு பிரசாரகர் தெலுங்கு தமிழ்தெரிந்த ஒருவித்வானை அனுப்பினால் நல்லது. ஹிந்திபாஷை பேசுகிற வைதீக சிரத்தையுள்ள பிரபுக்களும் அனேகர் இருக்கின்றார்கள். ஸ்ரீ ஜகத்குரு காமகோடிபீடம் சங்காராசார்யாள் ஆதி பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியாள் மாதிரி இப்பாதகண்டத்தை மாத்திரமல்ல, இவ்வுலகம் பூராவும் ஐந்துகண்டங்களையும் விஜயம் செய்து ஆஸ்திகமதத்தை ஸ்தாபனம் செய்வார்களென்று இரவும்பகலும் சாக்ஷாத் ஈசுவரனை எளியேன் பிரார்த்திக்கிறேன்.

சுந்தரமய்யர்,
ஸெகெண்ட்ராபாத்.

---

# வயோநிர்ணயம்.

மங்களம்.

1. வேதவேதாந்தங்களாலும், பிரும்மஸூத்திரவிவரணங்களாலும் அதன் தத்வோபதேசமொழிகளாலும் நம்மை அனுக்ரஹித்து ரக்ஷிக்கும் பரமேச்வரனையும், ஸ்ரீவியாஸாசார்யாளையும்,

ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளையும், தியாகராஜதீக்ஷிதாளையும் நான் புகழ்ந்து நமஸ்கரிக்கிறேன்.

(கருத்து) வேதத்தால் ஈசுவரனும், ஸூத்திரத்தால் வ்யாஸரும், பாஷ்யத்தால் பகவத்பாதாளும், அதனுபதேசத்தால் தியாகராஜதீக்ஷிதரென்றும் கிரமமாய் அன்வயித்துக்கொள்ளவேண்டும். இக்கிரந்தகர்த்தாவினுடைய வித்யாகுருவுக்கு தியாகராஜதீக்ஷிதர் என்று பெயர். இவரை ராஜுசாஸ்திரிகள் என்றும் அழைப்பது வ்ழக்கம். இவர் பரமேசுவராவதாரமாக சிவாஹஸ்யம் முதலிய புராணங்களால் போற்றப்பட்டும், நூற்றுநான்கு கிரந்தங்களை ஸர்வதர்சனங்களிலும்செய்தவரென்று பிரஸித்திபெற்றவருமாகிய ஸ்ரீமதப்பையதீக்ஷிதாவர்களின் வம்சத்தில் ஜனனமெடுக்கும்பாகதேயம் பெற்று அவர்களுக்கு ஸமானமாகவே எல்லா விஷயங்களிலும் புகழுடைந்தவர். இவர்கள் மன்னார்குடி என்னும் சம்பகாரண்யக்ஷேத்ரத்தில் வஸித்துவந்தார்கள். இவருடைய மஹிமையையறியாதார் இவ்வுலகில் யாவருமிருக்கமாட்டாராதலின் நான் அதிகங்கூறுவது அனாவசியம். ப்ரஸங்கவசமாக ஸங்கிரஹமாய் நான் இங்கு கொஞ்சம் கூறினேன்.

2. இவ்வுலகில் அக்நிஹோத்ரம் முதலிய வைதிககாரியங்களை ஸ்திரீஸஹாயர்களாகவேதான் அனுஷ்டிக்கவேண்டும். ஸ்திரீஸஹாயமாகிய ஆச்ரமத்துக்கு கிருஹஸ்தாச்ரமம் என்று பெயர். ஆகவே விவாஹம்செய்துகொள்ளாமல் தன்னிஷ்டப்படி ஸ்வயமாகவே ஒரு ஸ்திரீயை ஸஹாயமாக வைத்துக்கொண்டதனால் கிருஹஸ்தாச்ரமம் ஸித்திக்கமாட்டாதென்பது சாஸ்திரமூலமாக ஏற்பட்டுள்ள ஸித்தாந்தம். சாஸ்திரவிதிப்படி ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்துகொள்வதற்கு சாஸ்திரமூலமாகவே காலமும் விதித்திருக்கவேண்டும். சாஸ்திரங்களில் காலத்தை விசதமாக நிரூபணம் பண்ணப்பட்டிருப்பினும் அவைகளில் ஸம்சயமோ, விபரீதக்ஞானமோ ஜனங்களுக்குள் ஜனிக்கும்பக்ஷத்தில் சுருதி, ஸ்மிருதி, புராணம், நியாயம் இவைகளை நன்றாய் விமர்சம் செய்து நிர்ணயிக்கவேண்டியதும் அவசியமாகும் இன்றேல் விஹிதகாலத்தில் விவாஹம் அனுஷ்டிக்கப்பட்டதாக ஏற்படமாட்டாது. ஆகவே துஷ்டவிவாஹம் செய்துகொண்ட கிருஹஸ்தன் அனுஷ்டிக்கும் தர்மங்களும் வேதம் முதலிய பிரமாணங்களும்

நிஷ்பலமாய் முடிந்துவிடும். ஆதலால் விவாஹவயோநிர்ணயம் செய்யவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

3. ஆனல் வெகுகாலத்துக்குமுந்தியே அனேக வித்வான்களால் ஸ்திரீகளின் விவாஹகாலம் சுருதிஸ்மிருதிகளை நன்கு விசாரித்து தீர்மானிக்கப்பட்டிருப்பதால் மறுபடியும் அதே விஷயத்தில் என்போன்றவர்களின் புத்திஸாமர்த்யப் பிரகடனம் பிரயோஜனமற்றதேயாகும் என்பதில் ஐயமில்லை என்றாலும் சிலர் அவ்விஷயத்தில் சுருதிஸ்மிருதிகளுக்கு நியாயவிபரீதமாக அர்த்தம் சொல்லிக்கொண்டு ஆக்ஷேபம் பலமாய்ச் செய்துவருவதால் அவர்களுடைய ஆக்ஷேபத்திற்கு சுருதிஸ்மிருதிகளின் தத்வார்த்தத்தை நியாயபூர்வகமாய் நிர்ணயித்து ஸமாதானம் உரைத்து, மனு முதலிய முன்னேர்களின் ஸித்தாந்தத்தையே ஸ்திரப்படுத்த வேண்டும்.

4. ஆகையால் ஸ்திரீகள் விவாஹவயதை சுருதி, ஸ்மிருதி, நியாயம் இவைகளையனுஸரித்து நிர்ணயிக்கத்தொடங்குவாம்.

"வ்யபிசாரதோஷவிசாரம்"

சுருதிஸ்மிருதிகளில் கூறியவண்ணம் வர்ணுசிரம வியவஸ்தைக்கு உட்பட்டிருக்கும் ஆஸ்திகர்களுக்கு இஹபரசுகசாதனமாக விதிக்கப்பட்டிருக்கும் தர்மங்களெல்லாம் ஸ்திரீகளை வியபிசார தோஷமின்றி ஸம்ரக்ஷித்துக்கொள்ளுதல் மூலமாகவேதான் ஸித்திக்கவேண்டும். பரிசுத்தமுற்ற பெண்ணை மனைவியாக மணந்துகொண்டவனே தமது கடைமைகளையும் மற்ற ஆச்ரமங்களுக்கு உபகரித்தல் முதலியவைகளையும் ஸரிவரச்செய்யத் தகுதியுள்ளவனுக ஆவான் என்று மனு முதலிய மஹரிஷிகளின் அபிப்பிராயம்.

ஸ்திரீகளுக்கு வ்யபிசாரம் மிகக்கொடியது என்று நினைத்து மனுஸ்மிருதியில் அனேக சுலோகங்களால் 'ஸ்திரீரக்ஷணம் செய்வது ஒரு அறிய தர்மமாகும் என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது அதாவது—

"மனைவியை ஸம்ரக்ஷித்துக்கொள்பவன் தன் ஸ்ந்தானத்தையும் சீலத்தையும் குலத்தையும் தன்னையும்தர்மங்களையும் ரக்ஷித்துக் கொண்டவனுக ஆகிவிடுவான்" என்றும் தந்தை விவாஹத்திற்கு முந்தியும், யௌவனகாலத்தில் கணவனும் அதற்குப்பிறகு புத்தி

ரன் முதலியோரும் ஸ்திரீகளை ரக்ஷித்துவரவேண்டும் என்றும் ஸ்திரீகளுக்கே தனது கற்பு கெடாமலிருக்கும் விஷயத்தில் ஊக்கம் ஸ்வபாவமாக இருக்கவேண்டுமென்றும் மனு புகன்றார்.

அப்படியே தக்ஷஸ்மிருதியிலும் “ஸ்திரீபுருஷர்கள் பரஸ்பரம் நேசத்துடன் தமது இல்வாழ்க்கையைக்கழிப்பதுதான் ஸ்வர்க்கம் இதற்கு விபரீதமாகவிருந்து காலங்கழித்துவருவதுதான்கொடிய நரகமென்றும் ஒருவனுக்கு மனைவி தீயகுணங்களின்றியும் நற்குணங்களுள்ளவளாகவும் கிடைத்துவிடும்பக்ஷத்தில் அவன் அவளைக்கொண்டு இல்லறஸுகத்தையும் மோக்ஷத்தையும் அடைகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. (தொடரும்)

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாஸகர்.

ஸ்ரீ சித்ஸபேசாயமங்களம்.

## சிதம்பரம் 17-வது வருஷத்திய அத்வைத ஸபை.

ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தியின் திருவருளை முன்னிட்டு நிகழும் சுக்லஹு கார்த்திகைமீ 23௳ (8-12-29) பானுவாரம் முதல் நடைபெறும் ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தியின் மஹோத்ஸவ சமயத்தில் வழக்கம்போல் அத்வைத ஸபை ஆரம்பம் செய்யப்பெற்று மேற்படி 8-12-29 முதல் 16-12-29 வரையிலும் பிரதினமும் காலை 8-மணி முதல் 9-மணிவரை உபநிஷத்பாராயணமும் மாலை 3-மணி முதல் 4-மணிவரை சிதம்பரமஹாத்மிய பிரசங்கமும் 4-மணி முதல் 5-மணி வரையில் ஈசாதி தசோபநிஷத்துக்களின் உபன்யாஸங்களும் சிறந்த பண்டிதர்களைக் கொண்டு நடத்தப்படுமாகையால் அதற்கும் 17-12-29ல் ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தியினுடைய ஆருத்ராதரிசன மஹோத்ஸவத்திற்கும் தாங்கள் வந்திருந்து பேரானந்தமடையும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுக்லஹு கார்த்திகைமீ 3௳ சிதம்பரம்.

மஹாமஹோபாத்தியாய
சிவ. தெண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர்,
அத்வைதஸபையின் காரியதரிசி.

# ஓர் ஸந்தேஹம்.

ஆர்யதர்மாபிமானிகளே !

ஆபஸ்தம்பத்தில் பிதிருசிராத்தத்தில் ஹோமத்திற்குப்பிறகு ஹோமசேஷான்னத்தை அபிமர்சனம் செய்வதற்குறிய மந்திரத்தால் அன்னுபிமர்சனம் செய்து வருகிறோம். மாதிருசிராத்தத்திலும் இதே மந்திரத்தில், தத, என்ற இடத்தில் ஊஹம் செய்து அபமர்சனம் செய்கிறதா ? அல்லது ஊஹம் செய்யவேண்டியதில்லையா ? இந்த விஷயத்தை பிரமாணவசனித்துடன் நம் ஆர்ய தர்ம பத்திரிகை மூலமாகவே பிரசுரிக்க வேணுமென்று பணிந்து பிரார்த்திக்கிறேன்.

N. V. நாராயணசாஸ்திரி,
ஸத்தியமங்கலம்

---

# தேவை.

கும்பகோணம் ராஜாதர்ம வேதபாடசாலைக்கு வியாகரணத்தில், அல்லது ஸாஹித்தியத்தில் மூதலாகவாவது அல்லது இரண்டாவதாகவாவது தேரின பிராமண சிரோமணி உபாத்தியாயர் தேவை. அபேக்ஷகர்கள் தங்கள் Qualification Certificate மூதலானவைகளுடன் கீழ்க்கண்ட விலாஸத்துக்கு அப்ளிகேஷன் செய்து கொள்ளலாம்.

பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரிகள்,
புதுடபீர்தெரு
கும்பகோணம்.

வாழ்க வந்தனர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.